2017 ஜூலை 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 152, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

152—

துணை மின் நிலையம்

***2874—திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆற்காடு தொகுதி, திமிரி ஊராட்சி ஒன்றியம், காவனூர் ஊராட்சிப் பகுதியில் 110 கே.வி. துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 10–15

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள, ஆற்காடு தொகுதி, திமிரி ஊராட்சி ஒன்றியம், காவனூர் ஊராட்சிப் பகுதியில் ஆணைமல்லூர் கிராமத்தில் 33/11 கி.வோ. துணை மின் நிலையம் ஒன்று 3.34 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைப்பதற்கு நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதற்கான பணிகள் தொடங்கப்பட இருக்கின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன் அவர்கள்.*

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்த பதிலுக்கு தொகுதி மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கணியனூர், புதூர், அகரம், கலவை, அல்லல்சேரி, மாந்தாங்கல், மேச்சேரி, முள்ளுவாடி, கலவை*

கூட்ரோடு, கே. வேலூர் ஆகிய பகுதிகளில் குறைந்த மின்னழுத்தம் இருக்கின்றது. அதை சரிசெய்வதற்கு கலவையில் 110/11 கே.வி. துணை மின் நிலையமும்; முள்ளுவாடியில் 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையமும்; தாஜ்புராவில் 33/11 கே.வி. துணை மின் நிலையமும் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய பகுதிகளிலிருந்து 10 கிலோ மீட்டர் தொலைவில், திமிரி ஊராட்சி ஒன்றியத்தில், 110 கே.வி.ஏ. துணை மின் நிலையம் இருக்கின்றது. அங்கே, 2x16 மின்மாற்றிகள் இருக்கின்ற காரணத்தினால், மின்பளு குறைவாகத்தான் இருக்கின்றது. எதிர்காலத் தேவையைக் கருத்திற்கொண்டுதான் இப்போது ஆணைமல்லூரில் 33/11 கே.வி. துணை மின் நிலையம் அமைப்பதற்காக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இப்போது, வளர்ச்சியைப் பார்க்கின்றபோது, 0.4 சதவிகிதம்தான் இருக்கிறது. இப்போது அமைக்கப்படும் 33/11 கே.வி. துணை மின் நிலையம், 2021 ஆம் ஆண்டு வரைக்கும் தேவையைப் பூர்த்தி செய்யுமென்று நினைக்கின்றோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவதுபோல, அங்கேயே வருங்காலத்தில் கூடுதலாக ஒரு மின்மாற்றி 8 M.V.A. அளவிற்கு அமைத்தோம் என்றால், இன்னும் 10 ஆண்டுகளுக்கு மின்பளு போன்ற பிரச்சினைகள் இருக்காது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன் அவர்கள்.

திரு. ஜே.எல். ஈஸ்வரப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை விவாதத்தின்போது, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் transmission and distribution loss 18 சதவிகிதம் என்று குறிப்பிட்டிருந்தார். Lengthy distribution lines இருப்பதாலும், primary and secondary distribution lines–கிராமப் பகுதிகளுக்கு

வெகு தொலைவிற்குக் கொண்டு செல்வதாலும், T&D Loss அதிகமாக வருவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் T&D Loss 18 சதவிகிதம் என்று சொல்லியிருக்கிறார். ஆனால், "Business Line" பத்திரிகையில் கடந்த டிசம்பர் 2 ஆம் தேதி, இந்தியாவில் T&D Loss 33 சதவிகிதம் என்று article எழுதியிருக்கிறார்கள். அதிகமான lines பழுதடைந்திருக்கின்றன. பழுதடைந்திருக்கிற line அனைத்தும் renovation செய்யப்பட வேண்டும்; modernise செய்ய வேண்டும். அந்த மாதிரியான காரணங்களால்கூட distribution loss அதிகமாக வருவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. Distribution loss அதிகமாக இருந்தால், மின் உற்பத்தி செய்வதற்கு பட்ஜெட்டில் நாம் எவ்வளவுதான் நிதி ஒதுக்கீடு செய்தாலும், அந்த நிதி வீணாகவும், விரயமாகவும்தான் செல்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நான் தெரிவித்த கருத்தினை மனதிற்கொண்டு, நான் ஏற்கெனவே தெரிவித்த கலவை மற்றும் முள்ளுவாடி, தாஜ்புரா பகுதிகளிலும் துணை மின் நிலையம் அமைப்பதற்கு முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், "Business Line" பத்திரிகையில் T&D Loss இந்தியாவில் 33 சதவிகிதம் இருப்பதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது என்று தெரிவித்திருக்கிறார். தமிழ்நாட்டில் எப்போதும் 33 சதவிகிதம் இல்லை; 24 சதவிகிதம்தான் இருந்தது. இப்போது 18 சதவிகிதமாக அதைக் குறைத்திருக்கிறோம். 'உதய்' திட்டத்தில் கையெழுத்திட்டதின் வாயிலாக, அதை 15 சதவிகிதமாகக் குறைப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வி சரியான கேள்வி. ஏனென்று சொன்னால், line–ஐ வெகு தொலைவிற்குக் கொண்டு செல்கின்றபோது, line loss அதிகமாக வருவதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. அதற்காகத்தான் இப்போது ஆணைமல்லூரில் 33/11 கே.வி.ஏ. துணை மின் நிலையம் அமைக்கப்படுகின்றது. எதிர்காலத்தில் இன்னும் தேவை அதிகமாக இருந்தால்,

அதைப் பூர்த்தி செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110–ன்கீழ், 129 துணை மின் நிலையங்கள் அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். இந்த ஓராண்டுக் காலத்திற்குள் எங்கெல்லாம் தேவை ஏற்படுகிறதோ, அந்தப் பகுதிகளில் இடம் கிடைக்கும்பட்சத்தில், உடனடியாக அந்தப் பணிகளை மேற்கொள்வதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன் அவர்கள்.*

திரு. இரா. ஜெயராமகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியம் மூலமாக விவசாயிகளுக்கு தட்கல் முறையில் மின் இணைப்பு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதாவது,* 5 HP, 7½ HP *மற்றும்* 10 HP *மின் இணைப்பு கோரி 24–6–2017–க்குள் விண்ணப்பித்த விவசாயிகளுக்கு முறையே 2.5 இலட்சம், 2.75 இலட்சம் மற்றும் 3 இலட்சம் ரூபாய் செலுத்தினால் மின் இணைப்பு வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. அதேபோன்று,* 15 HP *வரை மின் இணைப்பு கோரி விண்ணப்பித்தவர்களுக்கு, அந்தத் திட்டம் இருக்கின்றதா? அதற்கு ஏதேனும் தொகை நிர்ணயிக்கப்படுமா அல்லது அவர்கள் விருப்பப்பட்டால்* 10 HP *ஆகக் குறைத்து, மின் இணைப்பு பெறுவதற்கான வாய்ப்பை அரசு வழங்குமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டதைப்போல, அதிகமான பொது மக்களும் இதுகுறித்துக் கேட்டிருக்கிறார்கள். வருங்காலங்களில்* 15 HP *இணைப்பு கொடுப்பதற்குண்டான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2017 ஜூலை 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. கீதா அவர்கள்.

முற்பகல் 10–20

திருமதி ம. கீதா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் வணங்குகிறேன். கிருஷ்ணராயபுரம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட உப்பிடமங்கலம் கிராமத்தில் I.P.D.S. திட்டத்தில் 33/11 கே.வி.ஏ. துணை மின் நிலையம் அனுமதிக்கப்பட்டும் இதுநாள் வரையில் பணிகள் தொடங்கப்படவில்லை. எனவே, 2015–2016 முதல் நிலுவையாக உள்ள இப்பணிகளைத் தொடங்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கிருஷ்ணராயபுரம் தொகுதி, உப்பிடமங்கலத்தில் பணிகள் துவங்கப்படவில்லை என்று தெரிவித்திருக்கிறார்கள், அதற்கு நிருவாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்று தெரியவில்லை. அதுமட்டுமல்ல; ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டுள்ளனவா என்பதும் தெரியவில்லை. அதுகுறித்து விசாரித்து, அந்தப் பணிகளை உடனடியாக ஆரம்பிப்பதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆஸ்டின் அவர்கள்.

திரு. எஸ். ஆஸ்டின்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட தடிக்காரக்கோணம் ஊராட்சி, காமராஜர்புரம் பகுதியில் உள்ள வீடுகளுக்கு மேலாக உயர் அழுத்த மின் கம்பிகள் செல்கின்றன.

இதனால் அப்பகுதியில் உள்ள வீடுகளில் வசிக்கக்கூடிய மக்களின் உயிருக்கு ஆபத்தான நிலை பல ஆண்டுக் காலமாக இருந்து வருகிறது. மின் வாரியத்தின்மூலம் அதனை மாற்றித்தர வேண்டும் என்று தொடர்ந்து மக்கள் கோரிக்கை வைத்து வருகிறார்கள். ஆனால், ஊராட்சியில் அதற்காகப் பணம் கட்ட வேண்டிய சூழ்நிலை தற்போது இருந்துகொண்டிருக்கின்றது. எனவே, அதனைக் கருத்தில்கொண்டு, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கடந்த ஆண்டு அதற்கான நிதியை ஒதுக்கியிருந்தேன். அதற்கு விதிமுறைகளில் இடம் இல்லை என்று சொல்லி, நிருவாக அனுமதியும் மறுக்கப்பட்டுவிட்டது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இதனை ஒரு சிறப்பு நிகழ்வாகக் கருதி அந்த மக்களைப் பாதுகாக்கும் வகையில், மின் வாரியத்தின் மூலமாகவே உயரழுத்த மின் கம்பிகளை மாற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தற்போது ஊராட்சிப் பகுதிகளில் பாதைகளில் இடையூறாக இருக்கக்கூடிய மின் கம்பங்களை மின் வாரியமே மாற்றிக் கொடுத்துவிடுகின்றது. ஆனால், பேரூராட்சிப் பகுதிகள் என்று சொன்னால், அதற்கான பணத்தினை பேரூராட்சிகள் கட்டினால்தான், அதனை மாற்றிக் கொடுக்கின்ற நிலைமை இன்றைக்கு இருந்து வருகின்றது.

கன்னியாகுமரி மாவட்டத்தினைப் பொறுத்தவரையில், கிட்டத்தட்ட 56 பேரூராட்சிகள் உள்ளன. ஊராட்சிகளை விட நிதிநிலைமையில் நலிந்த நிலையில்தான் பல பேரூராட்சிகள் அங்கு இருக்கின்றன. எனவே, ஊராட்சிகளுக்கு செய்து கொடுப்பதைப்போல, பேரூராட்சிகளுக்கும் செய்து கொடுக்க வேண்டும். பாதைகளை விரிவாக்கம் செய்கின்றபோது, நடுவில் மின் கம்பங்கள் அப்படியே இருக்கின்ற நிலை ஏற்படுகின்றது. எனவே, எந்த நோக்கத்திற்காகப் பாதை விரிவாக்கம் செய்யப்படுகின்றதோ, அந்த நோக்கம் நிறைவேறாத நிலைதான் உள்ளது. எனவே பாதைக்கு இடையூறாக ஊராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் இருக்கக்கூடிய மின் கம்பங்களை, மின் வாரியம் மூலமாகவே மாற்றிக் கொடுப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், வீடுகள் இருக்கின்ற பகுதிகளில், உயர் மின் அழுத்தக் கம்பிகள் செல்வதாகத்

2017 ஜூலை 7]

தெரிவித்திருக்கிறார். பொதுவாக, வீடுகள் இருக்கின்ற பகுதிகளில் அதை அமைப்பதில்லை. மின் பாதைகளை அமைத்ததற்குப் பின்னர், அங்கு வீடுகளைக் கட்டிக்கொள்கிறார்கள். இதுகுறித்து நான் ஏற்கெனவே இந்த அவையில் சொல்லியிருக்கின்றேன். மின் பாதை செல்கின்ற இதுபோன்ற பகுதிகளில் வீடுகளைக் கட்டிக் கொண்டதற்குப் பிறகு, அதனை மாற்றியமைக்க வேண்டும் என்று சொன்னால், இடம் கிடைப்பது பெரிய கஷ்டம். அதுமட்டுமல்லாமல், இடம் கிடைத்தாலும், அதற்கு செலவு அதிகமாகின்றது. எனவே, அதனையும் மின் வாரியத்தின் நிதிநிலைக்கேற்பதான் செய்ய முடியும். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் நான் சொல்லிக்கொள்வது, உயர் மின் அழுத்தக் கம்பிகள் செல்கின்ற பகுதிகளில், கீழே வீடுகளைக் கட்டினால் ஆபத்து ஏற்படும் என்பதை நீங்கள் அவர்களுக்கு எடுத்துச்சொல்ல வேண்டும். சென்னையில், கொளத்தூர் பகுதியில்கூட உயர் மின் அழுத்தக் கம்பிகள் செல்லும் பாதையின்கீழ் ஒருவர் வீடு கட்டியிருக்கிறார். உயர் மின் அழுத்தக் கம்பி செல்லும் பகுதியை விட்டுவிட்டு, அதற்குப் பக்கத்தில் இன்னொரு ரூம் கட்டியிருக்கிறார்கள். அந்த வீட்டிலிருந்தவர் துணியைக் காயவைப்பதற்காக, அவர் குனிந்தபோது மின்சாரம் தாக்கி உயிரிழந்தார். எனவே, அவர்கள் மேல் மின் கம்பி படவேண்டியதில்லை; கிட்டத்தட்ட 2 அடி தூர இடைவெளியில் குனிந்தாலே அந்தப் பகுதிகளில் மின்சாரத்தினால் பாதிப்பு ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கின்றது. எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும், உயர் மின் அழுத்தக் கம்பிகள் எங்கெங்கு செல்கின்றனவோ, அதற்குக் கீழே வீடுகள் கட்டும்போதே அவர்களை எச்சரிக்க வேண்டும்.

இரண்டாவதாக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், ஊராட்சி மற்றும் பேரூராட்சிப் பகுதிகளில் பாதைகளை விரிவாக்கம் செய்கின்றபோது மின் கம்பங்கள் நடுவில் இருக்கின்றன என்று சொன்னார். சாலைகளை அமைக்கும்போதே, அந்தக் கம்பங்களை மாற்றியமைப்பதற்கான மதிப்பீட்டையும் போடவேண்டும். அந்தக் கம்பங்களை எடுத்து, ஓரமாக மாற்றிப் போடுவதற்கான தொகையை ஊராட்சி மற்றும் பேரூராட்சிகள் கட்ட வேண்டும். பேரூராட்சிப் பகுதிகளில் சாலை அமைக்கும்போது, கம்பங்களை மாற்றாமல், அப்படியே சாலை போட்டுவிட்டுச் சென்றுவிட்டால், நடுவில் உள்ள மின் கம்பிகளை மின்சார வாரியம் மாற்றுவதற்கு சிரமமாக இருக்கும்.

எனவே, பேரூராட்சிதான் அதற்குண்டான செலவினை ஏற்றுக்கொள்ள வேண்டும். வீடுகளுக்குமேல் செல்கின்ற உயரழுத்த மின் கம்பிகளால் எங்கெங்கு பாதிப்பு இருக்கின்றதோ, அங்கெல்லாம் எதிர்காலத்தில் முன்னுரிமை அடிப்படையில் ஏதாவது ஒரு நிதியில், அதனை மாற்றுவதற்கு முயற்சி செய்வோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சபா. ராசேந்திரன் அவர்கள்.

திரு. சபா. ராசேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெய்வேலி தொகுதி, பண்ருட்டி ஒன்றியத்திலுள்ள கீழக்கொல்லை கிராமத்தில் 33/11 கே.வி.ஏ. துணை மின் நிலையம் அமைப்பதற்கான அனுமதி அளிக்கப்பட்டு, 1 ஏக்கர் நிலமும் மின் துறையால் வாங்கப்பட்டுவிட்டது என்று நான் அறிகிறேன். தேவைகளை உடனே புரிந்துகொள்கின்றவர் நமது மாண்புமிகு மின் துறை அமைச்சர் அவர்கள். அந்தப் பகுதியிலே குறைந்த மின் அழுத்தத்தினால் கிட்டத்தட்ட 10 ஊராட்சிகள் பாதிக்கப்படுகின்றன. எனவேதான், இதற்கு அனுமதி அளிக்கப்பட்டது. எனவே, இப்பணியை வேகமாக முடுக்கிவிட்டு, விரைந்து முடிக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வந்து, அதனைச் செய்து கொடுக்க வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய பகுதியில் 33/11 கே.வி.ஏ. துணை மின் நிலையம் அமைப்பதற்கு 1 ஏக்கர் நிலம் எடுக்கப்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். குறைந்தபட்சம் 2 ஏக்கர் வேண்டும். மேலும், 1 ஏக்கர் நிலம் வேண்டும் என்பதற்காக மின்சார வாரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துக் கொண்டிருப்பார்கள் என நினைக்கிறேன். இல்லையென்றாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லிய அந்தப் பகுதியை ஆய்வு செய்து, மின் அழுத்தம் குறைவாக இருந்தால், முன்னுரிமை அடிப்படையில்

2017 ஜூலை 7]

உடனடியாக அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 153, மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

153—

கூட்டுக் குடிநீர்த் திட்டம்

***1262—திரு. கு. பிச்சாண்டி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, துரிஞ்சாபுரம் ஒன்றியத்தில் சாத்தனூர் அணையிலிருந்து குழாய்மூலம் நீரைக் கொண்டுவந்து கூட்டுக் குடிநீர்த் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கீழ்பெண்ணாத்தூர் தொகுதி, துரிஞ்சாபுரம் ஒன்றியத்திலுள்ள அனைத்துக் குடியிருப்புகளுக்கும் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டுவருகிறது. திருவண்ணாமலை மற்றும் வேலூர் மாவட்டங்களில் வசிக்கும் மக்கள் பயன்பெறும் வகையில், காவேரி ஆற்றை நீராதாரமாகக் கொண்டு குடிநீர் வழங்கிட, கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இத்திட்டம் நிறைவேற்றப்படும்பொழுது, துரிஞ்சாபுரம் ஒன்றியத்திலுள்ள அனைத்து ஊரகக் குடியிருப்புகளும் பயனடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, துரிஞ்சாபுரம் ஒன்றியத்திற்கு சாத்தனூர் அணையிலிருந்து குழாய்மூலம்